# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஸ்ரீ குணரதன சர்வதேச மன்றம் (கூட்டிணைத்தல்)

**ஸ்ரீ குணரதன சர்வதேச மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம அவர்களால் 2016, சனவரி மாதம் 26 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.*

(2015, திசெம்பர் மாதம் 07 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[ 67 ஆம் சட்டமூலம் ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## ஸ்ரீ குணரதன சர்வதேச மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"ஸ்ரீ குணரதன சர்வதேச மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகால வரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித் தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஸ்ரீ குணரதன சர்வதேச மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

ஸ்ரீ குணரதன சர்வதேச மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" என குறிப்பீடுசெய்யப்படும்) ஸ்ரீ குணரதன சர்வதேச மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக வுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "ஸ்ரீ குணரதன சர்வதேச மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும் : அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத்

தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்: அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) பௌத்த சாசனத்தின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(ஆ) பௌத்த தர்ம பாடசாலைகளை தாபிப்பதற்கு உதவியளித்தலும் அதற்காக நிலையங்களை தாபித்து கொண்டுநடாத்துதலும் ;

(இ) சமூக ஒழுக்க விழுமியங்களை கட்டிக்காப்பதற்குத் தேவையான திட்டங்களை வகுத்தல் ;

(ஈ) சமூக தாக்கங்களை இனங்கண்டு அதனை இல்லாதொழிக்க முறைமைகளை தாபித்தல் ;

(உ) ஏழ்மையை ஒழிப்பதற்காக முறையானதும் வெற்றிகரமானதுமான செயல்திட்டங்களை வகுத்தல் ;

(ஊ) இலங்கைக்கே உரித்தான பௌதீக, அறிவுசார்ந்த வளங்களைக்கொண்டு சமூக நலனோம்புகை மற்றும் அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(எ) தேசியரீதியாகவும் தனிநபர்ரீதியாகவும் மனித சமூகத்தின் மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் ஒத்தாசைகளை அதிகரித்தல் ;

(ஏ) இலங்கையில் மக்கள் நலனோம்புகை, கல்வி, சமூக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு அதனை அமுல்படுத்தல் ;

(ஐ) கல்வி, சுகாதார, விளையாட்டு, கலாசார அம்சங்கள் மற்றும் விவசாயம் ஆகியவற்றை விருத்திசெய்தலும், அறிவை மேம்படுத்தல், பரவலாக்கல் செய்தல், பிரசாரம் செய்தல் ஆகியவற்றிற்காக மாணவர்களுக்கு உதவிகள், புலமைப்பரிசில்கள், பரிசில்கள், அன்பளிப்புகள், நிதியுதவிகள் ஆகியவற்றை மேற் கொள்ளலும் நிலையங்களை நிறுவுதலும் ;

(ஒ) இலங்கையின் சம்பிரதாய, பரம்பரை அறிவுசார் விடயங்களை மேம்படுத்துவதும் நிலையங்களை உருவாக்குதலும் ;

(ஓ) சுற்றாடலை பாதுகாப்பதற்கான திட்டங்களை ஆரம்பித்து அதனை அமுல்படுத்தல் ;

(ஔ) சுதேச மருந்துவகைகளின் உற்பத்திக்குத் தேவையான மருந்து நாற்றுக்கள், மரஞ்செடிகள் மற்றும் ஏனைய பயிர்ச்செய்கைகளை உண்டுபண்ணி கொண்டுநடாத்து தல் ;

(க) மருந்துத் தோட்டங்கள் மற்றும் வீட்டுத்தோட்டங்கள் ஆகியவற்றை ஆரம்பித்தலும் அவற்றுக்காக உதவி ஒத்தாசைகளை வழங்கலும் ;

(ங) ஆயுர்வேத மருந்துவகைகளைக் கொள்ளல், விநியோ கித்தல், விற்பனை செய்தல் மற்றும் விற்பனை நிலை யங்களை தாபித்து அதனை கொண்டுநடாத்துதல் ;

(ச) ஆயுர்வேத மருந்துவகைகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்தல், அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்தல் மற்றும் அவ்வாறான நடவடிக்கை களை முறையாக கொண்டுநடாத்துதல் ;

(ஞ) உள்நாட்டு, வெளிநாட்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில்களை வழங்குதல், வெளிநாட்டு புலமைப் பரிசில்களுக்காக மாணவர்களை வழியனுப்புதலும் அது சம்பந்தமாக செயல்படுவதும் ;

(ட) பல்வேறு மொழிகள், பல்வேறு கற்கைகள் பற்றிய பல்கலைக்கழக மட்டத்திலான கல்வியொன்றினை வழங்கி சான்றிதழ்களை விநியோகித்தலும் அதற்கான மத்திய நிலையங்களை தாபித்தலும் ;

(ண) பார்வையற்றோர், கேள்வியிழந்தோர், ஊனமுற்றோர், அநாதைச் சிறுவர்கள், வயோதிபர், தீராத நோயினால் இன்னலுறுவோர், மந்தபுத்தியுடையோர் ஆகியோரை வாழச்செய்ய உதவியளித்தல் மற்றும் அதற்கான நிலையங்களை அமைத்து கொண்டுநடாத்துதல் ;

(த) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு ஏதுவாக இந்நிறுவனத்துடன் இணைந்த நிறுவனங்களை அமைத்து அவற்றை முறையாக கொண்டு நடாத்துவதும் மற்றும் அவற்றுக்குத் தேவையான ஏனையவற்றைச் செய்வதும் ;

(ந) ஏதாவது கைத்தொழில், வியாபாரம் அல்லது ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபடுவது மற்றும் விவசாய, தொழில்நுட்ப, வாணிப, கைத்தொழில்களை ஆரம்பித்து கொண்டுநடாத்தும் நபர்களுக்கு உதவியளித்தல் அல்லது ஒத்தாசை புரிதல் மற்றும் தொழில்நுட்ப, கைத்திறன் முறைமைகளை மக்களுக்கு வெற்றிகரமாக பெற்றுக்கொடுப்பதற்காக பயிற்சித்திட்டங்களை ஏற்பாடுசெய்வதும் விளம்பரப்படுத்துவதும் ;

(ப) கூட்டுத்தாபனத்தின் இலக்குகளை அடைந்துகொள்வதில் ஈடுபாடுகொள்கின்ற தன்னார்வத் தொண்டர்களுக்கும் ஏனையோருக்கும் புலமைப்பரிசில்கள் மூலமோ நிதியுதவிகள்மூலமோ அல்லது வேறுவிதமாகவோ உதவிகள் வழங்கல் ;

(ம) நூலகங்களை நடாத்துதல், புத்தகங்கள், சஞ்சிகைகள், நினைவுமலர்கள், பருவ வெளியீடுகள், ஒளி ஒலி தட்டுகள், ஆகியவற்றிற்கு அனுசரணை வழங்குதல் மற்றும் வெளியிடல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு உசிதமாகக் கருதப்படுகின்ற ஏனைய சேவைகளைச் செய்தல் ;

(ய) இலங்கையின், கிழக்கத்தேய, மேற்கத்தேய அழகியற் கலைசார் நடவடிக்கைகளை விருத்திசெய்தலும் அவற்றுக்காக நிலையங்களை அமைத்து கொண்டுநடாத்துதலும் ;

(ர) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக இலங்கையிலும் அல்லது வெளிநாடுகளிலும் கண்காட்சிகள், திட்டங்கள், உரைகள், சம்பாசனைகள், கலந்துரையாடல்கள், மாநாடுகள், விவாதங்கள், கல்விச் சுற்றுலாக்கள், உல்லாசப் பயணங்கள் அல்லது ஏனைய நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல், நடாத்துதல் மற்றும் ஆய்வுகூடங்களை அமைத்தல் ;

(ல) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் அல்லது அமைப்புக்களுடன் ஒத்துழைத்தல், செயல்படல் ;

(வ) மேற்படி குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான வாறானவையும் அதன் இடைநேர்விளைவானவையும் அல்லது அதற்கு உகந்தவையுமான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும் :-

(அ) நிதிகளைத் திரட்டுவதற்கும், காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளை பெறுவதற்கும் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான எம்முறையிலும் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும், குத்தகைக்கு அல்லது கேள்வுக்கு

எடுப்பதற்கும் அல்லது கொடுப்பதற்கும், வாடகைக்கு விடுவதற்கும், விற்பதற்கும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்ப்பதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொழிலுக்கு அவசியமான அல்லது வசதியான எவை யேனும் கட்டிடங்களை அல்லது கட்டுவேலைகளை நிர்மாணிப்பதற்கும், பேணுவதற்கும், மாற்றுவதற்கும் ;

(இ) நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக் குறுதிப்பத்திரங்கள் மற்றும் ஏனைய கைமாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றை ஆக்குவதற்கும், வரைவதற் கும், ஏற்றுக்கொள்வதற்கும், கழிப்பனவு செய்வதற்கும் புறக்குறிப்பிடுவதற்கும், பேச்சுவார்த்தைமூலம் பெறு வதற்கும், வாங்குவதற்கும், விற்பதற்கும், வழங்குவதற் கும், வங்கிக்கணக்குகளைத் திறப்பதற்கும், தொழிற் படுத்துவதற்கும், முடிவிடுவதற்கும், பிணைப்பொறுப் புடனோ பிணைப்பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாக தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைப் பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் குறிப்பீடுசெய்வதற்கும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை எய்தப் பெறு வதற்காக எவரேனும் ஆளுடன், இலங்கையிலோ வெளிநாட்டிலோ கூட்டிணைக்கப்பெற்ற அல்லது கூட்டிணைக்கப்பெறாத ஆட்களின் குழுமத்துடன் அல்லது ஏதாவது அரசாங்கத் திணைக்களத்துடன், கூட்டுத்தாபனத்துடன், சபையுடன் மாகாண சபையுடன், உள்ளூரதிகார சபையுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளல் ;

(ஊ) வெவ்வேறு வகுதியினவான உறுப்பாண்மைகளைப் பதிவுசெய்தல் தொடர்பில் செலுத்தப்படவேண்டிய கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கும் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர் களையும் நியமிப்பதற்கும், தொழிலுக்கமர்த்துவதற்கும், பதவிவிலக்குவதற்கும் அல்லது அவர்களின் சேவை களை முடிவுறுத்துவதற்கும், கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங் களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்கு செலுத்துவதற்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (*1*) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், பணிப்பாளர் நாயகம், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதி களுக்கிணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடிய ஏழு பேருக்குக் குறை யாத உறுப்பினர்களைக்கொண்ட பணிப்பாளர் சபையொன்றின் மூலம் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்கவும் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(*2*) இப்பிரிவில் (*1*) ஆம் உட்பிரிவில் உள்ளது எது எப்படி யிருப்பினும் வணக்கத்துக்குரிய டாக்டர் கொலம்பிஸ்ஸே குணரதன தேரர் சீவியகாலத்து கூட்டுத்தாபனத்தின் பணிப் பாளர் நாயகமாதல் வேண்டுமென்பதுடன் அவருக்குப்பின் அடுத்துவரும் பணிப்பாளர் நாயகத்தை அவர் பெயர்குறித்தலும் வேண்டும். அவ்வாறு அடுத்துறும் பணிப்பாளர் நாயகமும் சீவியகால பணிப்பாளர் நாயகமாதல் வேண்டும்.

(*3*) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபை இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பணிப்பாளர் சபையில் உறுப்பினர்களாக பதவிதாங்கியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (*1*) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக் களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு, உறுப்பினர் களைச் சேர்த்தல், மீளப்பெறுதல் அல்லது விலக்குதல், முகாமைச்

சபையைத் தேர்ந்தெடுத்தல், கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்கள், முகவர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போரின் கடமைகளை நடாத்துதல், அலுவல்களைக் கொண்டு நடாத்துவதில் கூட்டுத்தாபனத்தினாலும் முகாமைச் சபையினாலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள், அத்துடன் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்தலும் என்பவற்றுக்காக இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டபோது அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

உறுப்பாண்மையை இல்லாதொழித்தல்.

**7.** (1) சபை இடாப்பொன்றைப் பேணச் செய்வித்தல் வேண்டும். இச்சட்டம் தொடங்கும் தேதியன்று கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராகவிருக்கும் ஒவ்வோராளும் இதனகத்துப்பின்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக அனுமதிக்கப்படும் ஒவ்வோராளும் அவரது பெயரை அத்தகைய இடாப்பில் பொறிக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) இடாப்பில் பின்வரும் விவரங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு உறுப்பினரினதும் பெயர், முகவரி, வாழ்க்கைத் தொழில் ;

(ஆ) உறுப்பினரின் பெயர் இடாப்பில் பொறிக்கப்பட்ட தேதி; அத்துடன்

(இ) எவரேனும் ஆள் உறுப்பினராக இல்லாதொழிந்த தேதி.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கொடை, விருப்பாவணம், நன்கொடை, அறுதி, சந்தாப்பணங்கள் அல்லது கட்டணங்கள் என்ற வகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் தீர்மானிக்கவேண்டியவாறான ஒரு வங்கியிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளிலோ கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுகையில் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினை ஈடுசெய்வதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஆதனம் எந்த வகையிற் பெறப்பட்டாலும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இலாபத்தின் பகுதியாகவோ மிகையூதியம் என்ற வகையாகவோ அல்லது வேறு எவ்வகையாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலும் அல்லது கைமாற்றப்படுதலும் ஆகாது.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.

**9.** (1) கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட அத்துடன் கூட்டுத்தாபனத்தால் செலவிடப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றித் தகுந்த கணக்குகள் வைத்திருக்கப்படச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோர் ஆண்டும் ஒரு தடவையாவது கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட ஒரு கணக்காய்வாளரால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கணக்காய்வாளர்களினால் பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், வருமான செலவினக் கணக்கினதும் ஐந்தொகையினதும் சரி பிழை அவர்களால் சான்றுப்படுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது பணிப்பாளர் நாயகம் மற்றும் செயலாளரின் முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்

பதுடன் ; அவர்கள் தாங்கள் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்தும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்திற்கு செலுத்தப்படவுள்ளதுமான கடன்கள்.*

**11.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்திகதியன்று மன்றத்துக்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகைகள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**12.** ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பின் மீது அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை, ஒன்றில் பயன்பெறும் சொந்தக்காரராக அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது வேறுவகையாக எடுக்கவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் ஆற்றலுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும், அத்துடன் தொடர்புபட்ட கையாளுகைச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற, வில்லங்கத்துக் குட்படுத்த அல்லது பொறுப்பிக்கவுள்ள முழுத்தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்.*

**13.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக் கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும்,

ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப் பட்டனவுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அல்லது அதற்கு நேர்முந்திய நிலையில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருகின்றவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்